THE HON. SRI R. VENKATARAMAN : Even now private industrialist can employ geologists and ask them to make a preliminary survey. It is only when they want to dig the earth and take some wares, that the permission of the Government is required and permission is freely given whenever they want to explore any unmapped area.

SRI A. VEDARATHNAM : இந்த பூகற்ப ஆராய்ச்சி யார் நடத்துகிறது ? எந்தத் துறையில் நடத்தப்படுகிறது ? அதில் குறிப்பிடத்தக்க ரிசல்டுகள் இருந்தால் அறிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் இந்த ஆராய்ச்சியை நடத்துகிருர்கள். தென் பிராந்தியம், அதாவது, சென்னை, மைசூர், பாண்டிச்சேரி, கேரளம் ஒரு பிராந்தியம். எந்த எந்த இடத்தில் ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று ஒரு லிஸ்ட் தயார் செய்கின்றனர். அதன்படி ஆராய்ச்சி நடத்தப்படுகின்றது.

Nagapattinam Co-operative Stores

* 227 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government have received a pamphlet regarding misappropriation of funds in the Nagapattinam Co-operative Stores; and

(*b*) if so, the action taken in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination of the Government.

SRI V. K. KOTHANDARAMAN : ஏற்கனவே இந்த விஷயத்தைப்பற்றி விசாரணை செய்ததாகவும் இப்பொழுது இன்னொரு விசாரணை செய்யப்போவதாகவும் தெரிய வருகிறது. ஏற்கனவே விசாரணை செய்தது யார் ? இப்பொழுது விசாரணை செய்யப்போகிறவர் யார் என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் விசாரணை ஒன்றுமில்லை. சர்க்கார் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி ஆலோசனை நடந்து கொண்டு இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : நாகை கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற ஊழலைப்பற்றி பொதுமக்கள் அறிந்தும், தாளில் அச்சிட்டு வழங்கச் செய்தும்கூட இது வரை போதுமான அளவு தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற நிலை இருக்குமானுல் அப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு இது தவருன வழியில் செல்ல ஊக்கமளிக்காதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்வது சரியில்லை. போலீஸ் இன்வஸ்டிகேஷன் ஒன்று நடந்திருக்கிறது. சொசைடி ரிஜிஸ்ட்ரார் டிபார்ட்மெண்டு இன்வெஸ்டிகேஷன் நடத்தி இருக்கிருர். இதற்கிடையில் பணம் வசூலிப்பதற்கான முயற்சி செய்யப்பட்டும், பணம் வசூலிக்கப்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது. இவ்வளவு எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கின்றபோது ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது சரியாகாது.

SRI S. LAZAR : When such complaints are received by the Government do they find out whether they are bona fide complaints?

THE HON. SRI R. VENKATARAMAN : That is exactly the purpose for which this matter is referred to the Police.

6th March 1958]

SRI V. K. KOTHANDARAMAN : நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மைதான். ஆனுல் ஊழலை நாங்கள் நிரூபிக்கிறேம் என்று சாட்சி கொடுப்பதற்கு பலர் முன் வந்தும், அப்படி நிரூபிக்கவில்லை என்ருல் பிராசிகியூஷன் செய்யுங்கள் என்று சொல்லியும்கூட, விசாரணை நடக்கும் போது சாட்சியம் சொல்ல அனுமதிக்க மறுத்ததற்கு காரணம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தூர் அதிர்ஷ்டவசமாக கூட்டுறவு சங்கங்களில் பிணக்குகள் ஏற்பட்டுவிட்டன. ஒரு சாரார் சாட்சியம் அளிக்க முன் வருகிருர்கள். மற்றெரு சாரார் முன் வருவது இல்லை. இது ஏறக்குறைய வழக்கமாகிக் கொண்டு இருக்கிறது. இந்த நடு நிலைமை யிலிருந்து சர்க்கார் விசாரிக்கின்றனர். இது போலீசுக்கு விடப்பட்டிருக் கிறது. அது முடிந்தவுடன் நடவடிக்கை எடுப்பதுபற்றி முடிவு செய்யப் படும்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : கூட்டுறவு சங்கங்களில் இம்மாதிரி ஊழல்கள் நடப்பது வரவர ரொம்ப அதிகமாகிக் கொண்டு வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த நாம் கூட்டுறவு இயக்கத்தைத்தான் நம்பியிருக்கும்போது இப்படிப்பட்ட ஊழல்கள் விரிவாக மலிந்து நடப்பதைத் தடுக்க நிரந்தர மான பரிகாரம் தேட வேண்டாமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். 1-50 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : அம்மையார் அவர் கள் சொல்வது சரியல்ல. இந்த ஒரு வருஷ காலமாக இந்த சட்டசபையில் இரண்டு சொசைட்டிகளைப்பற்றிதான் இந்த விதமான புகார்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆகவே ஊழல்கள் நிறைந்திருக்கின்றன என்றும், ஊழல் கள் மலிந்திருக்கின்றன என்று சொல்வதானதும் அதை மிகைப்படுத்திச் சொல்வதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* HARDSHIP CAUSED BY THE SHIPS FROM MALAYA NOT CALLING AT NAGAPATTINAM PORT.

MR. SPEAKER : I have received notice of a motion under Rule 40 of the Madras Assembly Rules from the hon. Member Sri N. S. Ramalingam calling attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance. The hon. Member may now speak.

SRI N. S RAMALINGAM : மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, சென்ற சில மாதங்களாக சிங்கப்பூர், பெடரேட்டட் மலேயா ஸ்டேட்ஸ் போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய கப்பல்கள் எல்லாம் வழக்கம்போல் நாகப்பட்டணம் துறைமுகத்திற்கு வராமல் நேரடியாக சென்னைக்குக் கொண்டுவரப்படுகின்றன. அதற்குக் காரணம் என்ன சொல்லுகிருர்கள் என்ருல் சிங்கப்பூர் போன்ற பிரதேசங்களில் ப்ளூ ஜுரம் அதிகமாக இருப்பதால் அங்கிருந்து வரக்கூடிய பிரயாணிகளை நாகப் பட்டணத்தில் கொண்டு வந்து இறக்காமல் நேராக சென்னைக்குக் கொண்டு வந்து சென்னையில் அவர்களை பரிசோதனை செய்து அதன் பிறகு வெளியே அனுப்பி வருகிருர்கள். அதனுல் அந்தப் பிரயாணிகளுக்கு காலதாமதம் ஏற்படுவதோடு பல கஷ்ட நஷ்டங்களுக்கும் அவர்கள் உள்ளாகிருர்கள். அப்படி வரக்கூடிய பிரயாணிகள் ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்கு பல விதத்தில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு அதிகப்படியான